<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண். 101/2022** **நாள்.12.02.2024**

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சின்னான் | சாதி | |
| கிராமம் | அவியூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 60 |

**<u>வ.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

I. நான் படிக்கவில்லை . எனக்கு எழுத, படிக்க தெரியாது. நிலம், வீடு சம்பந்தமாக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் என் பெற்றோரின் சொத்துக்கள் என்பதால் பாகம் கோரியுள்ளேன். குடும்ப சொத்தில் வந்த வருமானத்தில் இருந்து என் அண்ணன் பெயரில் கிரையம் வாங்கினேன். சொத்துக்களின் விவரம் தெரியும். குடும்ப சொத்து 1 ஏக்கர் அவியூரில் இருந்தது. மேற்படி சொத்துக்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் , அண்ணன் மற்றும் அக்கா ஆகியோர் என் பெற்றோருக்கு வாரிசுகள் . என் அக்கா அம்மச்சி இறந்துவிட்டார். என் அக்கா அம்மச்சியின் வாரிசுகள் உள்ளார்கள். அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவர்களுக்கு சொத்து கொடுத்துவிட்டதால் அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை. 3, 4 அயிட்ட சொத்துக்களை என் அண்ணன் பெயரில் கிரையம் வாங்கினோம். மேற்படி கிரைய பத்திரத்தில் என் பெயர் இல்லை . மேற்படி கிரைய பத்திரத்தில் குடும்ப சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்லுவது போல் பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் என் அண்ணன் பெயரில் வாங்கப்பட்டது. யசோதா பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைக்கப்பட்டது. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ,2 ஆவணகளில் என் பெயர் உள்ளதா என்றால் இருக்கும். மேற்படி ஆவணங்களில் குடும்ப சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தில் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது.

II. 5 வது அயிட்ட சொத்து வீடு சென்னை அமைந்த கரையில் உள்ளது. அந்த வீட்டிற்கு சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் சென்றேன். மேற்படி வீடு அடுக்குமாடி குடியிருப்பாகும். மேற்படி சொத்து என் அண்ணன் பெயரில் உள்ளது. மேற்படி சொத்து வாங்கும் போது நானும், உடன் இருந்து வாங்கினேன். மேற்படி சொத்து ரூ.4 லட்சத்திற்கு வாங்கினார்கள். மேற்படி சொத்து சம்பந்தமாக இவ்வழக்கில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்து சம்பந்தாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 5 வது அயிட்ட சொத்து யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்று தெரியவில்லை . 5 வது அயிட்ட சொத்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் என் அண்ணனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஒதுக்கப்பட்ட ஆவணத்தில் என் பெயர் இல்லை . சிவலிங்கம் அவர் மனைவிக்கு தானபத்திரம் எழுதிவைத்த விவரம் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 2, 3 மாதத்திற்கு முன்பு தான் தெரியும். மேற்படி தானபத்திரம் எழுதிவைத்தது எனக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**(மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் கோரியதால் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**